தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 177/மா/2024**

**நாள்: 04.08.2025**

| | | |
|---|---|---|
| திரு. கோ. கோவிந்தராஜ்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| (1) மண்டல அலுவலர், மண்டலம்–10<br>பெருநகர சென்னை மாநகராட்சி<br>(2) திரு. வெங்கட்ரமணன்,<br>மேற்கு மாம்பலம், சென்னை | --- | எதிர்மனுதாரர்கள் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 27.08.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.08.2024 அன்று பெறப்பட்டு 177/மா/2024 என எ ண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 27.08.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக செயற்பட்டாளர். பொதுமக்களுக்கான பொதுப்பணிகளை நீதிமன்றம் வரை சென்று செய்து வருவதற்கான சான்றுகள் ஏராளமாக என்னிடம் உள்ளது. சென்னை–33, மேற்கு மாம்பலம், தம்பையா ரோட்டில் சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வார்டு 134 அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தையொட்டி நான்கு கட்டிடங்களுக்கு பிறகு A B C D E F Flat அருகே சுமார் 6000 சதுரடியில் மூன்று தளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிடத்தின் முன்பகுதியில் சுமார் 10 அடி அகலம் 100 அடி நீளம் 4 அடி உயரத்தில் Step & Ramp-கள் அமைக்க திட்டமிட்டு சுமார் 5 மாதத்திற்கு முன் செங்கல், மணல், ரப்பீஸ், சிமெண்ட் கொட்டியிருந்ததை கண்டு 1913 எண்ணிற்கு பலமுறை போன் செய்து புகார் அளித்து AE அவர்களை நேரடியாக சந்தித்து வாய்மொழி புகார்கள் அளித்தேன். நடவடிக்கை இல்லை. இப்பொழுது ஆக்கிரமிப்பு கட்டுமான வேலைகள் முடிந்துள்ளது." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 04.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் 12.05.2025 நாளிட்ட கடிதம் ம.அ.10 ந.க. எண் 938561/2925–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

“மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் புதிய எண் 62, பழைய எண் 43, தம்பையா தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 என்ற முகவரியில் உள்ள கட்டிடமானது களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கட்டிடத்தின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த சாய்வுதளத்தினை அகற்ற கட்டிட உரிமையாளரினை அறிவுறுத்திய பின்பு. கட்டிட உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் JCB இயந்திரம் மூலம் இடித்து 05.04.2024 அன்று அகற்றப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் திரு. வெங்கட்ரமணன் அவர்கள், தான் 49 வயது நிரம்பிய உடல் ஊனமுற்றோர் என்றும் தன் கால்கள் மற்றும் இரண்டு கைகள் செயலிழந்த நிலையில் தன்னுடைய வயது முதிர்ந்த தாய் தான் இயற்கை உபாதைகள் செல்ல உதவுவது உட்பட அனைத்து உதவிகளையும் செய்து வருகிறார் என்றும் கடிதம் மூலம் குறிப்பிட்டுள்ளார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர் தனது வீட்டின் முன்பு உள்ள சாய்வு தளத்தினை இடித்துவிட்ட காரணத்தினால் இரண்டு மாத காலமாக மருத்துவமனை செல்ல இயலாத காரணத்தினால் சிறுநீர் தொற்று வியாதி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் வாரம் இருமுறை அவர் மருத்துவமனைக்கு மருத்துவ ஊர்தியில் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளதால் சாய்வு தளத்தினை இடிக்க வேண்டாம் என ஆணையர் அவர்களுக்கு அளித்த கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்கள்.

இருப்பினும், மனுதாரர் திரு. கோவிந்தராஜ் அவர்கள் தொடர்ந்து புகார் அளித்த வண்ணம் இருந்ததால், திரு. வெங்கட்ரமணன் வீட்டின் முன்புறம் மருத்துவ ஊர்தி வீட்டின் உட்புறம் வந்து அழைத்து செல்லும் வகையில் மனிதாபிமான அடிப்படையில் அந்த பகுதியினை மட்டும் விட்டுவிட்டு ஏனைய சாய்வுதள பகுதிகள் அனைத்தும் இடித்து அகற்றப்பட்டது. இதற்கான புகைப்பட நகலும் இணைக்கப்பட்டுள்ளது என்பதும் தற்போதும் கூட அப்பகுதி இடிக்கப்பட்ட நிலையில் அபிவிருத்தி பணிகள் செய்யப்படாமல் உள்ளது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளபடி இங்கு மழைநீர் தேங்குவதில்லை. இந்த வீட்டிற்கு எதிர்புறம் தான் மழைநீர் வடிகால்வாய் உள்ளது. மழை காலங்களில் மழை நீர் கால்வாயினை அடைய போதுமான வாட்டம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய கூற்றுப்படி, மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 18.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

“நான் சமூக செயற்பட்டாளர். சென்னை–33, மேற்கு மாம்பலம், தம்பையா ரோட்டில் சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வார்டு 134 அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த

அலுவலகத்தையொட்டி நான்கு கட்டிடங்களுக்கு பிறகு A B C D E F Flat அருகே சுமார் 6000 சதுரடியில் மூன்று தளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிடத்தின் முன்பகுதியில் சுமார் 10 அடி அகலம், 100 அடி நீளம், 4 அடி உயரத்தில் Step & Ramp-கள் கட்டப்பட்டன. இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் புகார் அளித்ததின் அடிப்படையில் அந்த Step & Ramp-கள் அகற்றப்பட்டன. மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலையினை ஆக்கிரமித்து Step & Ramp-கள் கட்டப்பட்டன. வீட்டின் உரிமையாளர் வேண்டும் என்றே இதனை செய்து வருகிறார். வீட்டின் உள்ளே போதிய இடம் இருந்தும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலையினை ஆக்கிரமித்துள்ளார்கள். மேலும், வீட்டின் ஒரு புறம் கோயிலும் மற்றொருபுறம் பள்ளியும் அமைந்துள்ளது. மேற்கண்ட ஆக்கிரமிப்பு சட்டத்திற்கு புறம்பானதாகும். எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களுக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 18.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் புதிய எண் 62 பழைய எண் 43, தம்பையா தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 என்ற முகவரியில் உள்ள கட்டிடமானது களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கட்டிடத்தின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த சாய்வுதளத்தினை அகற்ற கட்டிட உரிமையாளரினை அறிவுறுத்திய பின்பு கட்டிட உரிமையாளர், அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் JCB இயந்திரம் மூலம் இடித்து 05.04.2024 அன்று அகற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் திரு. வெங்கட்ரமணன் அவர்கள், தான் ஒரு மாற்று திறனாளி என்றும் மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக செல்வதால் சாய்தளத்தை இடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

இருப்பினும், திரு. கோவிந்தராஜ் அவர்கள் தொடர்ந்து புகார் அளித்த வண்ணம் இருந்ததால், திரு.வெங்கட்ரமணன் வீட்டின் முன்புறம் மருத்துவ ஊர்தி வீட்டின் உட்புறம் வந்து அழைத்து செல்லும் வகையில் மனிதாபிமான அடிப்படையில் அந்த பகுதியினை மட்டும் விட்டுவிட்டு ஏனைய சாய்வுதள பகுதிகள் அனைத்தும் இடித்து அகற்றப்பட்டது. மேலும், மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளபடி இங்கு மழைநீர் தேங்குவதில்லை. இந்த வீட்டிற்கு எதிர்புறம் தான் மழைநீர் வடிகால்வாய் உள்ளது. மழை காலங்களில் மழை நீர் கால்வாயினை அடைய போதுமான வாட்டம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. சாய்தள பகுதிகள் இடிக்கப்பட்ட பகுதிக்கான புகைப்பட நகலை சமர்ப்பித்துள்ளோம்.'' எனத் தெரிவித்துள்ளனர்.

7. மற்றொரு எதிர்மனுதாரர் திரு. வெங்கட்ரமணன் என்பவரின் சார்பாக அவரது தாய் திருமதி கல்பகம் ஸ்ரீவத்ஸன் என்பவர் 18.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''எனது மகன் திரு.வெங்கட்ரமணன் ஒரு விபத்தில் கால்கள் மற்றும் கைகள் செயல் இழந்த நிலையில் உள்ளார். அவரால் தனியார் வாகனத்திலோ இரு சக்கர வாகனத்திலோ பயணம் செய்ய இயலாது. அவர் மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸில் செல்வதற்கு

வசதியாக எனது வீட்டின் முன் சாய் தளம் அமைத்துள்ளேன். இது பெருநகர சென்னை மாநகராட்சி சாலையின் வரம்பிற்குள் இல்லை. இந்த சாய் தளம் அமைக்கப்பட்டதால் போக்குவரத்திற்கும், மற்ற ஏனையருக்கும் எவ்வித இடையூறும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரர் வேண்டும் என்றே எனது வீட்டின் முன் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலையினை ஆக்கிரமித்துள்ளதாக மனு அளித்து எனக்கும், எனது குடும்பத்தாருக்கும், மன உளைச்சலை அளித்து வருகிறார்.

எனது வீட்டின் முன் அமைத்துள்ள சாய்தளம் பொது மக்களுக்கோ குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கோ எவ்வித இடையூறு இல்லை என்பதாலும் மனுதாரர் தெரிவித்தவாறு மழைநீர் என் வீட்டின் முன் தேங்குவது இல்லை என்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளனர்.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் தாயாரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

சென்னை–33, மேற்கு மாம்பலம், தம்பையா ரோட்டில் சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வார்டு 134 அலுவலகத்தையொட்டி ABCDEF Flat அருகே சுமார் 6000 சதுரடியில் மூன்று தளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிடத்தின் முன்பகுதியில் சுமார் 10 அடி அகலம், 100 அடி நீளம், 4 அடி உயரத்தில் Step & Ramp-கள் கட்டப்பட்டதை குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ற்கு புகார் அளித்ததின் அடிப்படையில் அந்த Step & Ramp-கள் அகற்றப்பட்டன எனவும், வீட்டின் உள்ளே போதிய இடம் இருந்தும் மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலையினை ஆக்கிரமித்து Step & Ramp-களை வீட்டின் உரிமையாளர் வேண்டுமென்றே கட்டியுள்ளார் எனவும், வீட்டின் ஒரு புறம் கோயிலும் மற்றொரு புறம் பள்ளியும் அமைந்துள்ளது எனவும், மேற்கண்ட ஆக்கிரமிப்பு சட்டத்திற்கு புறம்பானது எனவும் தெரிவித்து, அதனை அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களுக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரர் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் புதிய எண் 62 பழைய எண் 43, தம்பையா தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 என்ற முகவரியில் உள்ள கட்டிடமானது களஆய்வு மேற்கொள்ளப்பட்டு, கட்டிடத்தின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த சாய்வுதளத்தினை அகற்ற கட்டிட உரிமையாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியும் அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் JCB இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டது எனவும், இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் திரு.வெங்கட்ரமணன் தான் ஒரு மாற்று திறனாளி என்றும் மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக செல்வதால் சாய்தளத்தை இடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் எனவும், இருப்பினும், திரு. கோவிந்தராஜ் அவர்கள் தொடர்ந்து புகார் அளித்த வண்ணம் இருந்ததால், திரு.வெங்கட்ரமணன் வீட்டின் முன்புறம் மருத்துவ ஊர்தி வீட்டின் உட்புறம் வந்து அழைத்து செல்லும் வகையில் மனிதாபிமான அடிப்படையில் அந்த பகுதியினை மட்டும் விட்டுவிட்டு ஏனைய சாய்வுதள பகுதிகள் அனைத்தும் இடித்து அகற்றப்பட்டுவிட்டது எனவும், மேலும், மழைக் காலங்களில் மழை நீர் எதிர்புறம் உள்ள மழைநீர் கால்வாயினை அடைய போதுமான வாட்டம் கொடுக்கப்பட்டுள்ளது எனவும்

தெரிவித்திருப்பது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

தனது மகன் திரு.வெங்கட்ரமணன் ஒரு விபத்தில் கால்கள் மற்றும் கைகள் செயல் இழந்த நிலையில் உள்ளதால், தனியார் வாகனத்திலோ இரு சக்கர வாகனத்திலோ பயணம் செய்ய இயலாது என்பதால், மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் செல்வதற்கு வசதியாக தனது வீட்டின் முன் சாய் தளம் அமைத்துள்ளதாகவும், இது பெருநகர சென்னை மாநகராட்சி சாலையின் வரம்பிற்குள் இல்லை எனவும், இதனால் போக்குவரத்திற்கோ, பொதுமக்களுக்கோ குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கோ எவ்வித இடையூறும் இல்லை எனவும், மனுதாரர் வேண்டும் என்றே தனது வீட்டின் முன் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சாலையினை ஆக்கிரமித்துள்ளதாக மனு அளித்து தனக்கும், தனது குடும்பத்தாருக்கும், மன உளைச்சலை அளித்து வருகிறார் எனவும், எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு மற்றொரு எதிர்மனுதாரரான திரு. வெங்கட்ரமணன் என்பவரின் தாயாரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை–33, மேற்கு மாம்பலம், தம்பையா ரோட்டில் சென்னை மாநகராட்சி மண்டலம் 10, வார்டு 134 அலுவலகத்தையொட்டி நான்கு கட்டிடங்களுக்கு பிறகு ABCDEF Flat என்ற மூன்று தளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிடத்தின் முன்பகுதியில் Step & Ramp-கள் கட்டப்பட்டதை மனுதாரர் கோரியவாறு அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மூலம் கள ஆய்வு செய்து, மேற்கண்ட Step & Ramp-கள் அகற்றப்பட்டது எனவும், இதன் தொடர்ச்சியாக கட்டிட உரிமையாளர் திரு. வெங்கட்ரமணன் தான் ஒரு மாற்று திறனாளி என்றும் மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக செல்வதால் சாய்தளத்தை இடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதின் பேரில், திரு.வெங்கட்ரமணன் வீட்டின் முன்புறம் மருத்துவ ஊர்தி வீட்டின் உட்புறம் வந்து செல்லும் வகையில் மனிதாபிமான அடிப்படையில் அந்த பகுதியினை மட்டும் விட்டுவிட்டு ஏனைய சாய்வுதள பகுதிகள் அனைத்தும் இடித்து அகற்றப்பட்டது என்றும், எதிர்புறம் மழைநீர் வடிகால்வாய் உள்ளதால், மழை நீர் தேங்குவதில்லை என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில் மாற்று திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016–ல் அங்கீகரிக்கப்பட்டுள்ள மாற்றுதிறனாளிகளுக்கான போக்குவரத்து அணுகுசாலை வசதி மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019, விதி 43–ல் மாற்றுதிறனாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் பாதிக்காத வகையிலும் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர், சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) திரு. வெங்கட்ரமணன்,
புதிய எண் 62, பழைய எண் 43,
தம்பையா தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை–600 033

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

6/8/25

செயலாளர்.

6/8/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032